*5*

# தாவீதின் மகன்/தேவனின் மகன்

## (2 சாமுவேல் 7:1-17)

*எவ்வளவு பெரியதாக அல்லது சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு நகரமும், மாற்கு 10:46-52ல் இயேசுவினால் எதிர்கொள்ளப்பட்ட "பார்வையற்ற பர்திமேயு" போன்ற ஒரு நபரையாவது குறைந்த பட்சம் கொண்டுள்ளது. இவர்கள் எப்போதுமே அங்கிருப்பவர்களாக, வழக்கமாகக் கவனத்தைக் கவரும் இடங்களில் இருப்பவர்களாக, இருப்பினும் எவரொருவரும் அவர்களுக்கு அதிக கவனத்தைச் செலுத்தாத காரணத்தில் உண்மையில் அங்கு இல்லாதவர்களாக உள்ளனர்.*

*பர்திமேயு எவ்வளவு காலமாகப் பார்வையற்று இருந்தார் என்றோ அல்லது சாலையின் ஓரத்தில் அவர் எவ்வளவு காலமாக நிறுத்தப்பட்டு இருந்தார் என்றோ நாம் அறிவதில்லை, ஆனால் அவர், அந்த வழியாக இயேசு ஒரு நாள் கடந்து சென்றதால், சரியான இடத்தில் சரியான வேளையில் இருந்தார். இயேசுவைப் பற்றியும் பார்வையற்றவர்களுக்குப் பார்வை அளிக்கும் அவரது வல்லமை பற்றியும் கேள்விப்பட்டிருந்த பர்திமேயு இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது என்று தீர்மானித்தார். அவர் "கூப்பிடத் தொடங்கினர்." அவர் சத்தமிட்டுக் கூப்பிட்டது மாத்திரமல்ல, ஆனால் "இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்!" என்று ஒரு தரம் மாத்திரமல்ல, ஆனால் திரும்பத் திரும்பக் கூறினார் என்று மாற்கு 10:47 கூறுகிறது. "யாரென்று அறியப்படாத" இந்த நபரினால் உருவாக்கப்பட்ட இந்தக் கொந்தளிப்பினால் சங்கடம் அடைந்தவர்களான அங்கு இருந்த சிலர். அவரைக் கடிந்துகொண்டு சத்தம் போடாது இருக்கும்படி அவரிடம் கூறினர். மாற்கு சுவிசேஷ விபரம், "அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்" என்று கூறுகிறது (வசனம் 48). அவரது விடாமுயற்சிக்குப் பலன் கிடைத்தது. இயேசு நின்று, அங்கு நின்று கொண்டிருந்தவர்களிடத்தில், "அவரை அழைத்து வரச்சொல்லி" அறிவுறுத்தினார். பின்பு அங்கு நின்றிருந்தவர்கள் பர்திமேயுவினிடத்தில், "திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார்" என்று கூறினர். பர்திமேயு கீழ்ப்படிந்தார், மற்றும் அவரை இயேசு குணமாக்கினார்.*

*பர்திமேயுவின் விபரக்குறிப்பு தனது சுயத்திலேயே ஒரு அற்புதமான வரலாறாக உள்ளது, ஆனால் இது ஆர்வமிக்க மற்றும் முக்கியமான ஒரு கேள்வியையும் எழுப்புகிறது: பர்திமேயு இயேசுவை "தாவீதின் குமாரனே" என்று அழைத்தது ஏன்? அவர் (பர்திமேயு), "தேவனுடைய குமாரன்," "ஆண்டவர்," "எஜமானர்," அல்லது இயேசு தம்மை வழக்கமாக அழைத்த சொற்றொடர் "மனுஷ குமாரன்" - போன்றவற்றைப் பயன்படுத்தாமல் இருந்தது ஏன்? பார்வையற்ற இம்மனிதரைக் குணமாக்கும் விஷயத்தில், தாவீதின் சந்ததி என்ற வகையில் இயேசுவின் பாரம்பரியம், பணிப்பொறுப்பு எதையாவது*

*செய்வதாக இருப்பது ஏன்?*

## வாக்குத்தத்தம்

***தாவீதிற்கு ஒரு "வீட்டை" கட்டுதல்!***

*இவையாவும், 2 சாமுவேல் 7:1-17ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தேவன் தாவீது அரசரிடம் ஏற்படுத்தியிருந்த ஒரு வாக்குத்தத்தத்தை நோக்கிப் பின்செல்லுகிறது. இஸ்ரவேல் நாட்டின் அரசர் என்ற வகையில் தாவீது, தமது ஆட்சியில் ஒரு அமைதியான நிலையை அடைந்திருந்தார். அவர் (ஒரு கூடாரத்திலோ அல்லது இராணுவ முகாமிலோ வாழ்வதற்கு மாறாக) நிரந்தரமான ஒரு தங்கும் இடத்தைக் கொண்டிருந்தார், "கர்த்தர் ராஜாவைச் சுற்றிலுமிருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீக்கலாக்கி, இளைப்பாறப்பண்ணினார்" (வசனம் 1ஆ). தாவீதுக்குத் தமது சூழ்நிலையைப் பொறுத்தமட்டில் ஏதோ சில விஷயங்கள் முழுவதும் சரியானதாகத் காணப்படவில்லை, இதை அவர் தீர்க்கதரிசியான நாத்தானிடத்தில் வெளிப்படுத்தினார்: "பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டில் நான் வாசம்பண்ணும்போது; தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே" (வசனம் 2). இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டில் இருந்து தப்பித்து வந்த பின்பு, அவர்கள் வடிவமைத்து ஆசரிப்புக் கூடாரத்தினுள் வைத்திருந்த பரிசுத்த பேழை (பெட்டி) இன்னமும் ஒரு கூடாரத்தில் வைக்கப்பட்டு இருக்கையில், தாவீது ஒரு நேர்த்தியான வீட்டில் வசித்து வந்தது அவருக்கு ஏற்புடையதாகக் காணப்படாது இருந்தது. தாவீது "தேவனுக்கென்று ஒரு வீட்டைக் கட்டவேண்டும்" என்று கூறியபோது, அவர் பேழைக்கு ஒரு தகுதியான கட்டமைப்பை - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒரு தேவாலயத்தை - கட்டவேண்டும் என்பதைத் தமது மனதில் கொண்டிருந்தார் என்பதை வேதவசனம் மறைமுகமாய் உணர்த்துகிறது, ஆனால் அதை வெளிப்படையாகக் கூறுவதில்லை. அவர் தேவனைக் கனப்படுத்த விரும்பினார், மற்றும் காலம் சரியானதாகக் காணப்பட்டது. அவரது திட்டங்களைப் பொறுத்தமட்டில் அவரிடத்தில் நாத்தான், "கர்த்தர் உம்மோடு இருக்கிறார்" என்று உறுதிப்படுத்தினார். இருப்பினும் அன்று இரவில் அவர், தாவீதுக்குத் தரும்படி ஒரு செய்தியைத் தேவன் தமக்குக் கொடுத்த ஒரு தரிசனத்தைக் கண்டார்:*

> *கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ? நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற் கொண்டு இந்நாள்வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன். நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ? (2 சாமுவேல் 7:5-7).*

செய்தி தெளிவானதாக இருந்தது: தேவனுக்கு ஒரு வீடு தேவைப்படவில்லை மற்றும் அவர் ஒரு வீடு வேண்டும் என்று கேட்டிருக்கவில்லை. மேலும், அவர் ஒரு வீட்டை விரும்பி இருந்தால், அதைத் தமக்காகக் கட்டும்படி அவருக்குத் தாவீது தேவைப்பட்டிருக்க மாட்டார். தாவீதின் மனவிருப்பம் நல்லதாக இருந்தது என்பது தெளிவு, ஆனால் அதே வேளையில் அது சற்று வரம்பு மீறிய துணிச்சல் கொண்டதாக இருந்தது. தாவீது ஒரு மாபெரும் அரசராக இருந்தார், ஆனால் தேவன் இன்னமும் தேவனாகவே இருந்தார்; அவருக்குத் "தயவு செய்ய" தாவீது தேவைப்படவில்லை.

8 முதல் 11அ வரையுள்ள வசனங்களில் தேவன், தாமே ஆசீர்வதிக்கும் ஒருவர் என்பதைத் தாவீதுக்கு நினைவூட்டினார். ஆடுகளை மேய்த்தல் என்ற தாழ்வான வேலையில் இருந்து தாவீதை எடுத்து இஸ்ரவேல் நாட்டின் அரியணையில் அமர்த்தியது அவர்தாம். தாவீதின் விரோதிகள் யாவரையும் தோற்கடித்து அவர்தாம், மற்றும் அவர் தமது மக்கள் இளைப்பாறவும் அவர்களுடைய விரோதிகள் இனியும் அவர்களைத் துன்புறுத்தாமல் பாதுகாக்கவும் ஒரு இடத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தியது அவர்தாம்.

பின்பு 11ஆ வசனத்தில் நாம், உண்மையிலேயே திகைக்கச் செய்யும் பின்வரும் கூற்றைக் காணுகிறோம்: *"இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்"* (என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவனுக்காக ஒரு வீட்டைக் கட்டும்படி தாவீதை அனுமதிப்பதற்கு மாறாக, தாவீதுக்காக ஒரு வீட்டைக் கட்டப்போவதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்தார். பின்தொடரும் வசனங்கள் தெளிவாக அறிவிக்கிறபடி, தேவன் உலகப்பிரகாரமான ஒரு இல்லிடத்தைப் பற்றிப் பேசவில்லை. அவர் தாவீதுக்கு ஒரு இராஜரீக வம்சத்தை, தாவீதின் மரணத்திற்குப் பின்பு ஆளுவதற்கு ஒரு சந்ததியை அவருக்கு அளித்தலைப் பற்றிப் பேசினார். பிரிட்டிஷ் மக்கள் "வின்ட்சரின் வீடு" என்று பேசும்போது குறிப்பிடுவது போன்று, இவ்விடத்தில் "வீடு" என்ற வார்த்தை ஒரு அரச வம்சத்தைக் குறிக்கிறது. தேவன் "தாவீதின் வீட்டைக்" கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்து கொண்டிருந்தார்.

### தாவீதின் அரியணையை என்றென்றைக்கும் நிலைப்படுத்துதல்!

2 சாமுவேல் 7:12-16ல், உண்மையில் மூன்று வாக்குத்தத்தங்கள் உரைக்கப்பட்டுள்ளன: (1) தாவீதின் இடத்தில் ஆளுகை செய்ய ஒரு மகன்; (2) இந்த மகன் - தாவீது அல்ல ஆனால் இந்த மகனே - தேவனைக் கனப்படுத்த ஒரு வீட்டைக் கட்டுவார்; மற்றும் மிகவும் முக்கியமாக (3) "அவரது இராஜ்யத்தைத் தேவன் என்றென்றைக்கும் நிலைப்படுத்துவார்." இந்த உறுதி வாக்குகளுடன் தேவன், தாவீதின் மகனுக்குத் தாம் தகப்பனாக இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். அவரது பாவங்களுக்காக அவரைத் தேவன் சிட்சித்தாலும், அவர் தாவீதுக்கு முன்பு அரசாண்ட சவுலை விட்டுத் தமது அன்பை எடுத்துப் போட்டது போன்று, தாவீதின் மகனிடத்தில் இருந்து தமது நிலைவரமான அன்பை எடுத்துப் போடமாட்டார் (1 சாமுவேல் 15). தேவன், *"உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்"* என்று வாக்குத்தத்தம் செய்தார் (2 சாமுவேல் 7:16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தாவீதின் நிலையில் உள்ள யாரேனும் ஒருவருக்கு இதைக்காட்டிலும் அதிகம் திருப்தி

தரும் வாக்குத்தத்தம் எதையும் ஏற்படுத்தி இருக்க இயலாது. இஸ்ரவேல் மக்களினம் நிறைவில் இளைப்பாறுதலைக் கொண்டிருக்கும் என்றும் தாவீதின் அரசவம்சம் என்றென்றைக்கும் தொடரும் என்றும் தேவன் தாவீதுக்கு உறுதி அளித்தார்! தாவீது மிகவும் ஆழ்ந்த வகையில் தம்மைப் தாழ்மைப்படுத்தி கர்த்தருடைய மறுப்பை ஏற்றுக்கொண்டு, நன்றியின் ஆழ்ந்த உணர்வுடன் அவரது ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொண்டார் என்பதை, இரண்டு சாமுவேல் 7:18-29 வசனப்பகுதி பதிவு செய்துள்ளது.

தாவீதுக்குத் தேவன் ஏற்படுத்திய வாக்குத்தத்தங்கள் மிக நெருக்கமான ஆய்வைச் சுமந்துள்ளன. பழைய ஏற்பாட்டின் மற்ற பல தீர்க்கதரிசனங்களைப் போன்றே, இவ்வசனப் பகுதியும், இது உரைக்கப்பட்ட காலத்தில் இருந்து அருகாமையில் ஒன்றும் தூரத்தில் ஒன்றுமாக, ஒரு இரட்டை நிறைவேற்றத்தைக் கொண்டுள்ளது. தாவீதின் மகனான சாலொமோன், தேவாலயத்தைக் கட்ட அனுமதிக்கப்பட்டார் என்பது அருகாமையில் இருந்த நிறைவேற்றமாகும் (1 இராஜாக்கள் 5-8). தேவன் சாலொமோனின் ஆளுகையினுடைய மகாப்பெரும் தன்மையை நிலைப்படுத்தினார். அதுபோன்றே 14ம் வசனம் உரைக்கிறபடி, சாலொமோன் தமது அந்நிய மனைவியர் பலரின் செல்வாக்கின் விளைவாக, கடைசியில் விக்கிரக ஆராதனையில் வீழ்ந்தபோது, தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்திருந்தபடியே அவரைத் தண்டித்தார் (1 இராஜாக்கள் 11). இந்த வாக்குத்தத்தங்கள் சாலொமோனின் ஆளுகையினூடேயும் அவருடன் தேவனுடைய செயல்கள் மூலமாகவும் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்பதைக் காணுதல் கடினமானதாக இருப்பதில்லை.

இருப்பினும் தாவீதின் அரியணை என்றென்றைக்கும் நிலைப்படுத்தப்படும் என்ற வாக்குத்தத்தம் சாலொமோன் மூலமாக நிறைவேற்றப்பட்டது என்று கூறுதல் கடினமாக இருக்கும். உண்மையில் இவ்வாறு இருக்கவில்லை என்பதைப் பழைய ஏற்பாடு செயல்விளக்கப்படுத்துகிறது. சாலொமோனின் காலத்திற்குப் பின்பு இராஜ்யம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது, அவற்றில் தெற்கு இராஜ்யம் மாத்திரமே (யூதா இராஜ்யம்) தாவீதின் வம்சாவழியில் வந்த அரசர்களைக் கொண்டிருந்தது. இந்த இராஜ்யமும்கூட, தேவனுக்கு எதிராக மக்களின் கலகம் மற்றும் பாபிலோனியப் பேரரசின் படையெடுப்பு ஆகியவற்றின் இணைவினால், கடைசியில் அழிக்கப்பட்டது. தாவீதில் இருந்து தோன்றிய அரசர்களின் வரிசையானது தற்காலிகமாக ஒரு முடிவுக்கு வந்தது. ஆகையால், 2 சாமுவேல் 7:13, 16ல் உள்ள “என்றென்றைக்கும்” என்ற வார்த்தையானது, சாலொமோனுக்கு அப்பால் வேறு யாரையோ சுட்டிக்காண்பிப்பதாக இருக்க வேண்டியதாயிற்று.

## இந்த வாக்குத்தத்தத்தில் உள்ள மேசியாத்துவ நம்பிக்கை

**மேசியாத்துவ நம்பிக்கை**

2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் தாவீதிற்குத் தேவனுடைய வாக்குத்தத்தமானது, வரவிருந்த ஒரு அரசரை, தமது மக்களை மீட்கும் ஒரு மேசியாவை (நேரடி அர்த்தத்தில் “அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்”)

பற்றிய இஸ்ரவேல் மக்களின் எதிர்பார்ப்பிற்கு அடிப்படையை வடிவமைத்தது. இஸ்ரவேல் நாடு, அடுத்தடுத்து வந்த விரோதிகளால் தோற்கடிக்கப்பட்ட வேளையில் விடுதலையாளர் பற்றிய இந்த நம்பிக்கை வளர்ந்தது. குறிப்பாகப் பாபிலோனின் படையெடுப்பு மற்றும் அரசத்துவம் கலைக்கப்படுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து, "இஸ்ரவேல் நாட்டின் நல்வாய்ப்புக்களை மீளக்கட்டுவிக்க" (எரேமியா 33:7) யாரேனும் ஒருவர் வரவேண்டும் என்ற ஏக்கமானது யூதத்துவ அரசியல் மற்றும் மார்க்கரீதியான நம்பிக்கையின் நிலையான ஒரு பாகமாயிற்று.

இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் யூத மக்கள், வரவிருந்த தங்கள் மேசியாவை, ஒரு "புதிய தாவீது," அதாவது இஸ்ரவேலுக்கு அதன் விரோதிகளிடத்தில் இருந்து இளைப்பாறுதலை அளிக்கத் தாவீதைப் போன்ற இன்னொரு யுத்தவீரர்/அரசர் என்ற வகையில் நினைத்தனர். இந்த மேசியா, ஒருக்காலும் முடிவு பெறாத அரசாட்சியைக் கொண்ட "தாவீதின் மகனாக" இருப்பார். பின்வருவன போன்ற எண்ணற்ற பழைய ஏற்பாட்டு வேதவசனப்பகுதிகளில் இந்த நம்பிக்கை தெளிவாக்கப்பட்டுள்ளது:

> *இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே (ஏரேமியா 23:5, 6).*

> *அந்நாளில் நான் அவன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அந்நியர் இனி அடிமை கொள்வதில்லை. தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள் (ஏரேமியா 30:8, 9).*

> *நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் (ஏசாயா 9:6, 7).*

> *என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மேல் ராஜாவாக இருப்பார்; அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார்; அப்பொழுது அவர்கள் என் நியாயங்களில் நடந்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படியே செய்து, நான் என் தாசனாகிய யாக்கோபுக்குக்*

*கொடுத்ததும், உங்கள் பிதாக்கள் குடியிருந்ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள், அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்; என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார் (ஏசாயா 37:24, 25).*

மேசியா ஒரு "இரண்டாவது தாவீதாக" இருக்க வேண்டியது ஏன்? என்று நாம் ஆச்சரியப்படலாம். அவர் ஒரு "இரண்டாவது மோசேயாக," ஒரு "புதிய ஆபிரகாமாக," அல்லது இன்னொரு நோவாவாக அல்லது தானியேலாக ஏன் இருக்கக் கூடாது? தேவன் தாவீதுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியிருந்தார் என்பது முதன்மைக் காரணமாக உள்ளது. மேலும் தாவீதின் வாழ்வானது பல அம்சங்களில், இயேசு அனுபவிக்க வேண்டிய வாழ்வை முன்நிழலிட்டது. தாவீது ஒரு மேய்ப்பராகவும் அரசராகவும் இருந்தார், மற்றும் அதுபோன்றே, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் மீது ஒரு மேய்ப்பராகவும் அரசராகவும் இருக்கிறார் என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது (உதாரணத்திற்கு, மத்தேயு 2:2; 27:37; யோவான் 10:11-18; 1 பேதுரு 5:1-4; வெளிப்படுத்தின விசேஷம் 17:14; 19:16 ஆகிய வசனப்பகுதியைக் காணவும்). இத்துடன் கூடுதலாக, தாவீதின் பாடுகள் இயேசுவின் பாடுகளை முன்நிழலிட்டன. தாவீது இஸ்ரவேலை ஆள்பவராக ஆவதற்கு முன்னர், அவரது வெற்றியைக் குறித்துப் பொறாமை கொண்ட சவுல் அரசரால் துன்புறுத்தப்பட்டார் (காண்க 1 சாமுவேல் 18:28, 29). பல ஆண்டுகளுக்குப் பின்பு அவர், மக்களின் பலரது தயவைப் பெற்று தனது தந்தைக்கு எதிராகக் கலகம் செய்த தமது சொந்த மகனான அப்சலோம் என்பவரால், அரசபதவியிலிருந்து ஏறக்குறைய நீக்கப்பட்டார் (2 சாமுவேல் 15:10-12). இவ்விரு விஷயங்களிலும் தாவீது தப்பியோடும்படியும், அரசால் தேடப்படும் நபரின் வாழ்வை வாழும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டார், அவரது வாழ்வு எப்போதும் ஆபத்திலேயே இருந்தது (1 சாமுவேல் 19:10-12; 2 சாமுவேல் 15:14; காண்க சங்கீதம் 54). தாவீதின் பாடுகள் மற்றும் நமது கர்த்தரின் பாடுகள் ஆகியவற்றிற்கு இடையிலான இணைவுகள், சங்கீதம் 22ல் மிகவும் விரிவாகக் கொண்டுவரப்படுகின்றன, இதன் முதல் வசனத்தை இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது உரைத்தார். சங்கீதம் மற்றும் இயேசுவின் அனுபவம் ஆகியவற்றிற்கு இடையில் நாம் குறிப்பிடத்தக்க பல இணைவுகளைக் காணுகிறோம்: தேவனால் கைவிடப்பட்டதாக உணருதல், அருகில் இருப்பவர்களின் கேலி செய்யும் அவமானப்படுத்துதல்கள், முழுமையான பலவீனம் மற்றும் இளைப்படைதல் மற்றும் அவர்களின் உடைக்காகப் பிறர் சீட்டுப்போடுதல் என்பதும் கூட இதில் உள்ளடங்கி இருக்கிறது.

### மேசியாத்துவ நம்பிக்கை நிறைவேற்றப்படுதல்

புதிய ஏற்பாடு எழுத்தாளர்கள், இயேசுவை "தாவீதின் மகன்" என்று அடையாளப்படுத்துவதில் வெளிப்படையாக இருந்தனர். பார்வையற்ற பர்திமேயு சரியானவராகவே இருந்தார்! இதனால்தான் இயேசு, மிகவும் அடிக்கடி "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அர்த்தப்படும் வகையில், "கிறிஸ்து" (*christos*, இது "மேசியா" என்பதற்குச் சமமானதாக உள்ளது) என்று அழைக்கப்பட்டார்.

இயேசுவின் மேசியாத்துவம்/அரசத்துவம் என்பதைப் பற்றிய ஆய்வுக்கருத்து எண்ணற்ற வழிகளில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. உதாரணமாக, இயேசுவை இஸ்ரவேல் மக்கள் நீண்ட காலம் எதிர்பார்த்துக் காத்திருந்த அரசராக முன்னிறுத்துதல் என்பது மத்தேயு சுவிசேஷத்தின் இலக்காக உள்ளது. இது, இந்த சுவிசேஷ விபரம், "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு": என்று தொடங்குவது ஏன் என்பதை விளக்கப்படுத்துகிறது. முதலாவதாக இயேசு, "கிறிஸ்து" என்றும், பின்பு அவர் தாவீதின் "மகன்" என்றும் அடையாளப்படுத்தப்படுகிறார் (இது 2 சாமுவேல் 7 மற்றும் அதன் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றிற்கு நன்கு பழக்கப்பட்ட யூதர்களால் தவறவிடப்படாத ஒரு கருத்தாகும்). அடுத்ததாக இந்தப் புத்தகம், அவர் தாவீதின் சந்ததியில் வந்தவர் என்பதை உரிமைகோருதலை நிரூபிக்க அவரது வம்சாவழியைக் கொடுக்கிறது. லூக்கா 2:4, 5 வசனப் பகுதியும், யோசேப்பு "தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த" காரணத்தாலும், அவர் ஜனத்தொகை கணக்கெடுப்புக்காகவும் வரிசெலுத்துவதற்காகவும் தமது முன்னோர்களின் இல்லத்திற்குச் சென்று அறிக்கை தர வேண்டியிருந்த காரணத்தாலும், இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தில் அல்ல, ஆனால் பெத்லகேமில் தான் பிறந்தார் என்று விளக்குகிறது. இது வரலாற்றில் ஏற்பட்ட தற்செயலான நிகழ்வாக இருக்கவில்லை; "தாவீதின் நகரமான" பெத்லகேமில் இயேசு பிறக்க வேண்டி இருந்தது.

யோவான், தாம் எழுதிய சுவிசேஷத்தின் இலக்காகப் பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டார்: "... இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும் ..." (யோவான் 20:30, 31). இயேசு தமது சீஷர்களிடத்தில், "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டபோது, இயேசுவைப் பற்றிய பிற கருத்துகளுக்கு நேர் எதிராகப் பேதுரு பின்வருமாறு பதில் அளித்தார்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." பேதுருவுக்கு இது தேவனாலேயே வெளிப்படுத்தப்பட்டது என்று கூறிய இயேசு, இந்த அறிக்கைக்காக அவரை (பேதுருவை)ப் பாராட்டினார் (மத்தேயு 16:15-17), புதிய ஏற்பாட்டின் முடிவுப் பகுதியில், வெளிப்படுத்தின விசேஷம் 19:16ம் வசனம், இயேசுவை "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்று அறிவிக்கிறது. அவர் இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலம் முழுமைக்கும் நிறைவான அரசராக இருக்கிறார்.

## புறக்கணிக்கப்பட்ட வாக்குத்தத்தம்

இயேசுவின் நாட்களில் இருந்த பெரும்பான்மையான யூத மக்களால், மேசியா என்ற வகையில் அவர் புறக்கணிக்கப்பட்டது ஏன்? தீர்க்கதரிசனங்கள் மிகவும் தெளிவாக இருந்து, அவற்றை இயேசு மிகவும் தெளிவாக நிறைவேற்றினார் என்றால், இதை அவர்களால் தவற விடமுடிந்தது எப்படி?

*மேசியாவைப் பற்றிப் பல நூற்றாண்டுகளாக எழுந்திருந்த பிரபலமான எதிர்பார்ப்புக்களை இயேசு நிறைவேற்றவில்லை* என்பதே இதற்குப் பதிலாக உள்ளது. மேசியா எப்படி இருப்பார் மற்றும் என்ன செய்வார் என்பது பற்றி மக்கள் வித்தியாசப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர், மற்றும் "மேசியாத்துவ விஷயங்கள்" என்று எதிர்பார்க்கப் பட்டவற்றைச் செய்யாதவர்,

மேசியாத்துவத்திற்கான வேட்பாளராக இருக்கும் நிலையில் இருந்து புறம்பே தள்ளப்பட்டார்.

இயேசு வாழ்ந்திருந்த முதல் நூற்றாண்டு உலகத்தில் யூதர்கள், கி.மு.. 63ல் இருந்து பலஸ்தீன நாட்டைக் கட்டுப்படுத்தி இருந்த ரோம அடக்குமுறையாளர்களைத் தோல்வியடையச் செய்து "இஸ்ரவேலின் முன்பிருந்த நிலைக்கு அதை மீளக்கட்டுபவராக" மேசியா இருப்பார் என்று நினைத்தனர். அவர் (தாவீதைப் போன்று) ஒரு யுத்த வீரராக/அரசராக இருப்பார் என்றும் அவர் தங்களின் விரோதிகளுக்கு எதிரான யுத்தத்தில் தங்களை வெற்றிகரமாக நடத்த ஒரு இராணுவத்தை எழுப்புவார் என்றும் அவர்கள் நம்பினர். அதற்குப் பதிலாக இயேசு, சமாதானத்தையும் ஒருவர் தமது விரோதிகள் மீது காண்பிக்க வேண்டிய அன்பையும் பற்றிப் பிரசங்கிக்க வந்தார் - இது உலகத்தின் மாபெரும் பேரரசிற்கு எதிராக முழுமையான அளவில் கலகம் செய்யும் ஒரு தலைவரிடம் எவரொருவரும் அரிதாகவே எதிர்பார்க்கும் விஷயமாக இருந்தது!

பின்பு, இயேசு சிலுவையில் அறையப்பட்டது பற்றிய பிரச்சனை இருந்தது. மேசியாவாக இருப்பவர் இஸ்ரவேல் நாட்டின் விரோதிகளால் கொலை செய்யப்படுவார் என்பதை யூத மனம் ஏற்றுக் கொள்ளக் கூடாதிருந்தது, அவர் ரோமர்களின் சிலுவையில் சிறுமையான மரணத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுப்பார் என்பது மிகவும் தாழ்ந்த விஷயமாக இருந்தது. இயேசுவின் கலிலேய ஊழியத்தின் தொடக்க நாட்களில் அவரைப் பின்பற்றிய திரளான கூட்டமானது, அவரது மேசியாத்துவம் ரோமாபுரி மீது வெற்றிக்கு அல்ல, ஆனால் சிலுவைக்கு வழிநடத்தியது என்று கண்டபோது, அவரை விட்டுச் செல் வதற்கு இதுவே சந்தேகத்திற்கு இடமின்றி காரணமாக இருந்தது.

இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள்கூட இதை ஏற்றுக்கொள்வதைக் கடினமாகக் கண்டனர். இயேசு, தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட அபிஷேகம் பெற்றவர் என்று முதலில் அடையாளம் கண்டு கொண்டிருந்த யோவான் ஸ்நானன் (மத்தேயு 3:13-15; யோவான் 1:19-34; 3:25-30), பிற்பாடு, இயேசுதாம் எதிர்பார்க்கப்பட்டிருந்தவரா அல்லது வேறு யாரேனும்வர காத்திருக்க வேண்டுமா என்று கேள்வி எழுப்பினார் (மத்தேயு 11:2-6). யோவான் ஏரோது அரசரின் சிறையில் தளர்ச்சியடைந்து ஏங்கிக் கொண்டு, மேசியா எழுப்பப்பட்டு இருந்தார் என்றும் அவர் இஸ்ரவேல் நாட்டைப் புதுப்பிக்கத் தொடங்கிவிட்டார் என்றும் கேள்விப்படக் காத்துக் கொண்டிருந்தார் - ஆனால் இராணுவநடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்த மேசியாத்துவ நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன என்பதை அவருக்கு இயேசு சுட்டிக்காண்பித்தார்.

இயேசுவின் சொந்த சீஷர்களே அவரது மேசியாத்துவத்தைப் புரிந்து கொள்வதில் சிரமம் கொண்டிருந்தனர். அவர் தமது ராஜ்யத்தில் வந்து ஆளுகை செய்யும்போது, யாக்கோபும் யோவானும் அவரது வலது மற்றும் இடது புறங்களில் அமர அனுமதிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுக்குப் பின்னால், இராஜரீக இராணுவத்துவ ஆட்சியாளர் பற்றிய எதிர்பார்ப்பு இருந்தது என்பது உறுதி (மாற்கு 10:34-40; மத்தேயு 20:20-23). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் புதிய நிர்வாகத்தில் உயர்ந்த தலைவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினர். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பும்கூட,

அவரிடத்தில் அப்போஸ்தலர்கள், "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" என்று கேட்டனர் என்பதை நடபடிகள் 1:6 வசனம் பதிவு செய்துள்ளது. எனவே, இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள், அவரது மேசியாத்துவத்தின் இயல்பைப் புரிந்து கொள்ளவும் அவர் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்பதை ஒப்புக் கொள்ளவும் தவறியதில் சிறிதளவே ஆச்சரியம் உள்ளது. அவரே நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த மேசியா என்பதைக் கேள்வியின்றி செயல்விளக்கப்படுத்தும் வகையில் அவர் காட்சிப்படுத்திய "அடையாளங்களை" அவர்கள் எண்ணவில்லை என்பதே அவர்களின் தவறாக இருந்தது (யோவான் 10:22-30).

*உண்மை நிலையில் இயேசு, "தாவீதின் மகனாக" மாத்திரம் இருத்தலைவிட அதிகமானவராக இருந்தார்* என்பது, பெரும்பான்மையானவர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ளாது போனதற்கு இரண்டாவது காரணமாக இருந்தது. மத்தேயு 22:41-46ல், இயேசு "கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவன் யாருடைய குமாரன்?" என்று கேட்டதன் மூலம் இந்தக் கருத்தைப் பரிசேயர்களிடத்தில் (இவர்கள் அவருக்கு மிகவும் தீவிரமான எதிராளிகளாக இருந்தனர்) நேரடியாகவே எடுத்துரைத்தார். அவர்கள், "அவர் தாவீதின் குமாரன்" என்று பதில் அளித்தபோது, இயேசு அவர்களுக்கு, தாவீது மேசியாவை "என் ஆண்டவர்" என்று அழைத்திருந்த, சங்கீதம் 110:1ஐச் சுட்டிக்காண்பித்தார். "தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி? என்றார்." இதற்கு அவர்கள் பதில் எதுவும் தரவில்லை. இயேசு தமது சொந்தமான, தாவீதின் குமாரத்துவத்தை மறுக்கவில்லை, ஆனால் அவர் தாவீதைவிடப் பெரியவராக இருந்ததால், இந்தப் பட்டப்பெயர் மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை என்பதையே அவர் காண்பித்தார். இது, தேவன் தாவீதுக்கு, இஸ்ரவேல் நாட்டின் அரியணையின்மீது அமர இருந்த, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "மகன், என் மகனாக இருப்பார்" என்று கூறியபோது முன்னுரைக்கப் பட்டது (1 நாளாகமம் 17:13; 22:10). இயேசு, தாவீதின் மகனாக மாத்திரம் இருக்கவில்லை; அவர் தேவனுடைய மகனாகவும் இருந்தார். பூமிக்குரிய வகையில் வெறும் ஆளுமைத்துவம் என்பதைக் காட்டிலும் அவரது ஊழியம் மிகவும் அதிகமானதாக இருந்தது - ஆனால் துரதிர்ஷ்டவசமாக இதுதான் (பூமிக்குரிய ஆளுகைதான்) யூத மக்களால் விரும்பப்பட்டதாக அல்லது எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தது.

தேவன் தாவீதுக்கு, அருகாமையில் இருந்த எதிர்காலம் மற்றும் மிகவும் தூரத்தில் இருந்த எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றி ஒரு இரட்டை வாக்குத்தத்தம் ஏற்படுத்தினார்: அவரது அரியணையில் அமருவதற்கு ஒரு மகன், மற்றும் அவரது சந்ததி என்ற வகையில் அவருடைய மகனாக மாத்திரமின்றி. தேவனுடைய குமாரனாகவும் இருக்கும் ஒரு மகன். சாலொமோன் அரசர் தமது தந்தைக்குப் பின்பு இஸ்ரவேல் நாட்டின் அரியணையில் அமர்ந்து, இவற்றில் முதலாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். மேசியாவாகிய இயேசு கடைசியும் நிறைவுமான நிறைவேற்றத்தை அளித்தார், மற்றும் அவர் இன்னமும் "தாவீதின் அரியணைமீது அமர்ந்திருக்கிறார்!"

# இன்றைய நாட்களுக்கான வாக்குத்தத்தம்

*2 சாமுவேல் 7:5-16* வசனங்களில் தேவன் குறிப்பாகத் தாவீதுக்குப் பேசியிருந்தாலும், வேதாகம வரலாற்றில் அச்சாணி போன்றுள்ள இந்த நிகழ்வில் இருந்து இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் அதிகமாக உள்ளது:

*முதலாவது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மனிதரீதியான முழுமைத்துவத்தைச் சார்ந்து இருப்பதில்லை.* தாவீதுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தம் நிபந்தனையற்றதாக இருந்தது. தாவீது மிகக் கொடிய பாவங்கள் சிலவற்றைப் பிற்பாடு செய்திருந்தாலும், அவரிடத்தில் தேவன் தமது வார்த்தையை காப்பாற்றினார். நாம் நமது சொந்தத் தோல்விகளையும் சபையின் தோல்விகளையும் கண்ணோக்குகையில் அடிக்கடி பெரிதும் வருத்தம் அடைகிறோம், ஆனால் நாம் அவ்வாறு வருத்தம் அடையக் கூடாது. தேவன் தமது வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் நிறைவேற்றுவார்: இயேசு இன்னும் அரியணை மீது இருக்கிறார், மற்றும் அவரது மக்களின் இரட்சிப்பு நிச்சயமானதாகவே நிலைத்துள்ளது.

*இரண்டாவது, எவ்வளவு நாட்கள் ஆனாலும் சரி, தேவன் தமது திட்டங்களை நிறைவேற்றுவார்.* தாவீதில் இருந்து இயேசு காலம் வர ஒரு ஆயிரம் ஆண்டுகள் ஆயிற்று - ஆனால் எப்படி இருந்தபோதிலும் மேசியா வந்தார். அதுபோன்றே, இயேசு வந்த பின்பு இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்திருந்தபோதிலும், அவர் திரும்பவும் வருவார் என்று வேதவாக்கியங்கள் நமக்கு வாக்களிக்கின்றன. தேவன் நமது கால அட்டவணையின்படி பணிசெய்வதில்லை என்பதால் நாம் ஒருக்காலும் நம்பிக்கை இழந்து போய்விடக்கூடாது. மாறாக நாம், அவரது நோக்கங்கள் நிறைவேற்றப்படும்படி விசுவாசத்துடன் காத்திருப்பது அவசியமாக உள்ளது. நாம் அவர் மீது நம்பிக்கையாக இருந்து புறம்பே திரும்பாதிருந்தால், நாம் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கப்படுவோம்.

*மூன்றாவது, இயேசுவைப் பற்றிய அரைகுறையான சத்தியங்களை ஏற்றுக்கொள்ளுதல் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.* இயேசுவை "தாவீதின் குமாரனே" என்று அழைத்தபோது பர்திமேயு சரியானவராகவே இருந்தார், இருப்பினும் அவர் கூறியது சத்தியத்தின் ஒரு பகுதியாக மாத்திரமே இருந்தது. இன்றைய நாட்களில் இயேசு அடிக்கடி, ஒரு மாபெரும் மனிதராக, ஒரு தீர்க்கதரிசியாக அல்லது "ஒரே மீட்பராக" அல்ல ஆனால் "ஒரு மீட்பராக" தயாளமாய் ஒப்புக்கொள்ளப்படுகிறார். இயேசுவே கிறிஸ்து/மேசியா மற்றும் தேவனுடைய மகன் என்ற முழுமையான அறிக்கையைக் காட்டிலும் குறைவான எதுவும் போதுமற்றதாக உள்ளது.

*நான்காவது, நாம் செய்யக்கூடிய எதுவும் தேவன் நமக்காகச் செய்துள்ளவற்றிற்கு ஈடாகாது.* தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்ப விரும்பினார். தேவன் தாமே உண்மையில் கொடுப்பவர் மற்றும் தமக்கு ஏதொன்றும் அளிக்கப்படத் தேவையில்லை என்பதை அவருக்கு நினைவூட்டினார். தேவன் தாவீதிற்கு, அவர் எதிர்பார்த்த அல்லது விரும்பிய எல்லாவற்றிற்கும் அதிகமாகவே அளித்திருந்தார். அதுபோன்றே நாம், நமது நன்மையான செயல்கள் அல்லது ஆவிக்குரிய சாதனைகள் ஆகியவற்றினால்

அவரது பார்வையில் ஏற்புடையதாக உள்ள வாழ்வைத் தேவனுக்கு அளிக்க முடியும் என்று நாம் நினைக்கும் போது, நம்மையே வஞ்சித்துக் கொள்பவர்களாக இருக்கிறோம். அதற்குப் பதிலாக நாம், பிற்பாடு காண இருக்கிறபடி, நமக்காக நாமே ஒருக்காலும் செய்ய இயலாது இருப்பவற்றைத் தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்காக நிறைவேற்றியுள்ளார். நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அழைக்கப்பட்டிருக்கிறோம்; ஆனால் நாம் அவ்வாறு செய்கையில், மேசியாவாகிய இயேசு மூலமாகத் தேவன் நமக்கு நிறைவேற்றி உள்ள யாவற்றுடனும் ஒப்பிடுகையில், "(நம்முடைய) நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது" என்பதை (ஏசாயா 64:6) நாம் நினைவில் வைக்க வேண்டும். பார்வையற்ற பர்திமேயு போல, நாம் அவரை "எங்கள் மீது இரக்கமாயிரும்!" என்று மாத்திரம் அழைக்க முடியும் - மற்றும் இயேசுவின் மூலமாக அதையே செய்வதாக அவர் வாக்குத்தத்தம் செய்கிறார்.

---

## தேவாலயத்தைக் கட்டத் தாவீது தகுதியற்றவராக இருந்தது ஏன்?

தேவாலயத்தைக் கட்ட வேண்டும் என்று தாவீது நினைத்ததில், அவர் வரம்புமீறிய துணிச்சல் கொண்டிருந்தார் என்ற கருத்தைத் தவிர, தேவாலயத்தைக் கட்டத் தாவீதுக்குத் தேவன் அனுமதி மறுத்தமைக்கான காரணம், 2 சாமுவேல் 7 அல்லது 1 நாளாகமம் 17ல் அதன் இணைவசனப் பகுதி ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் 1 இராஜாக்கள் 5:3 மற்றும் 1 நாளாகமம் 22:8; 28:3 ஆகியவற்றில் ஒரு காரணம் தரப்படுகிறது: தாவீது அடிப்படையில் ஒரு யுத்த மனிதராக இருந்து அதிகமான இரத்தத்தைச் சிந்தியிருந்தார்.

இது அவரைத் தேவாலயம் கட்டத் தகுதியற்றவராக்கியது ஏன்? இரு பதில்கள் சாத்தியமானவையாக உள்ளன. முதலாவது பதில் 1 இராஜாக்கள் 5:3ல் இருந்து வருகிறது, அங்கு சாலொமோன், யுத்தச் செயல்கள் தாவீதை ஒரு தேவாலயம் கட்ட இயலாத அளவுக்கு பணிமும்முரமானவராகச் செய்திருந்தது என்று கருத்துத் தெரிவித்தார். இருப்பினும் இது முதன்மைக் காரணமாக இருக்கக் சாத்தியமற்று உள்ளது, ஏனெனில் 2 சாமுவேல் 7:1ம் வசனம், தேவாலயம் கட்ட வேண்டும் என்ற தாவீதின் விருப்பம், "கர்த்தர் ராஜாவைச் சுற்றிலுமிருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி, இளைப்பாறப்பண்ணினபோது" வந்தது என்று கூறுகிறது. மிகவும் சாத்தியமான காரணம் 1 நாளாகமம் 22:8ல் காணப்படுகிறது: "நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய்'' (காண்க 1 நாளாகமம் 28:3). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தாவீது அதிகமான இரத்தத்தைச் சிந்தியதானது அவரை, தேவாலயம் கட்டும் பணிப்பொறுப்பைச் செய்வதில் ஏதோ ஒரு வகையில் அவரை "அசுத்தமானவராக" ஆக்கியிருந்தது. (இரத்தம் மற்றும் அதனுடன் இணைந்த சடங்காச்சாரமான அசுத்தம் ஆகியவற்றின் ஒழுங்கு முறைகள் சிலவற்றை லேவியராகமம் 17ல் காண்க.) அவரது மகன் சாலொமோன் இந்த பிரச்சனையைக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அவரது தொடக்க கால ஆட்சியானது சமாதானம் மற்றும் வளமை ஆகியவற்றின் காலமாக இருந்தது

*(1 இராஜாக்கள் 5:4).* சாலொமோன் பின்வருமாறு அறிவித்தார்:

> *ஆகையால்: நான் உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின்மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னபடியே, என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக்கிறேன் (1 இராஜாக்கள் 5:5).*